
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1228

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

65

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘பாசப் பறவைகள்’ எதையும் தாங்கும் இதயத்தின் துடிப்பு!





**1988**-ஆம் ஆண்டில் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதி, பூம்புகார் புரொடக்‌ஷன் சார்பில், ‘முரசொலி’ செல்வம் தயாரித்து, வி.எம்.சி.ஹனீபா கதை எழுதியதுடன், இயக்கியும் வெளிவந்த திரைப்படம் ‘பாசப் பறவைகள்’.

இந்தத் திரைப்படத்தில் சிவக்குமார், ராதிகா, மோகன், லட்சுமி, ரவிச்சந்திரன், நாசர், எஸ்.எஸ்.சந்திரன், காந்திமதி, டெல்லி கணேஷ், சாருஹாசன் மற்றும் வி.எம்.சி. ஹனீபா ஆகியோர் நடித்துள்ளனர்.

### படத்தின் கதை

டாக்டர் சுகுமாரின் (சிவக்குமார்) தங்கை உமா (ராதிகா) ஒரு வழக்கறிஞர். அவளது கணவன் சங்கர் (மோகன்) ஒரு டாக்டர். அதே போல சுகுமாரின் மனைவி ஆனந்தி (லட்சுமி) ஒரு வழக்கறிஞர். சங்கரின் தந்தை திருஞானம் (ரவிச்சந்திரன்) ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி. இவர்களைச் சுற்றித்தான் கதை நிகழ்கிறது.

சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்து விடுவதால் சுகுமார்தான் தாயும் தந்தையுமாக இருந்து தனது தங்கை உமாவைப் படிக்க வைத்து ஆளாக்கி, டாக்டர் சங்கருடன் திருமணமும் செய்து வைக்கிறான். இரண்டு குடும்பங்களும் மிக மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்கின்றனர்.

டாக்டர் சுகுமார், சங்கர், சேகர் (நாசர்), எமன் (எஸ்.எஸ்.சந்திரன்) ஆகியோர் ஒரே மருத்துவமனையில் பணியாற்றுகின்றனர். இதில் சேகர் கெட்ட நடத்தை உள்ளவனாக இருக்கிறான். தனக்குக் கீழ் பணி செய்யும் செவிலியரிடம் தகாத முறையில் நடந்து கொள்கிறான். இதனை சுகுமார் கண்டிப்பதுடன், தலைமை அதிகாரியிடம் புகார் செய்கிறான். இதனால் கோபம் கொள்ளும் சேகர், சுகுமாரைப் பழிவாங்க காத்திருக்கிறான்.

இந்நிலையில் ஒரு நாள், தற்கொலை செய்துகொண்ட ஓர் இளம் பெண்ணின் உடல் பிரேதப் பரிசோதனைக்கு வருகிறது. அப்பெண்ணின் முகத்தைப் பார்த்து, சங்கர் அதிர்ச்சி அடைகிறான். முகமெல்லாம் வியர்க்கிறது. சுகுமாரிடம் தனக்கு உடல் நலமில்லை என்று சொல்லி விட்டுப் போய்விடுகிறான். அதனால், சுகுமார் மட்டும் அந்தப் பிரேதப் பரிசோதனையைச் செய்து முடிக்கிறான். ஃப்ளாஷ்பேக் காட்சியில், அந்தப் பெண்ணின் பெயர் ரோகிணி என்பதும் சங்கரின் முன்னாள் காதலி என்பதும் சொல்லப்படுகிறது. தன்ராஜுக்கும் (வி.எம்.சி.ஹனீபா) ரோகிணிக்கும் இடையிலான தகாத உறவை சங்கர் தெரிந்துகொள்வதால் ரோகிணியுடனான காதலை சங்கர் துண்டித்துவிடுகிறான். ஆனால், ரோகிணியும் சங்கரும் ஒன்றாக இருக்கும் புகைப்படத்தைக் காட்டி, தன்ராஜ் மிரட்டிப் பணம் பறித்துவருகிறான். கடைசியாக, இரண்டு இலட்சம் பணம் தராவிட்டால் லாரியால் மோதிக் கொலை செய்துவிடுவதாக மிரட்டுகிறான். இந்தச் செய்திகளையெல்லாம் சுகுமாரிடம் சங்கர் சொல்கிறான். சுகுமார் இப்பிரச்சினையைத்தான் கவனித்துக் கொள்வதாகச் சொல்கிறான்.

இந்தச் சூழலில் வெளிநாடு சென்று மருத்துவ மேல்படிப்பு படிப்பதற்கான வாய்ப்பு மருத்துவர்களுக்கு வருகிறது. இதனை மருத்துவத் தலைமை அதிகாரி (சாருஹாசன்) சுகுமாரை அழைத்துச் சொல்கிறார். சுகுமாருடைய மிக நீண்டகாலக் கனவு அது என்பதால், அவனும் அதற்கான தேர்வை, தான் சிறப்பாக எழுதுவதாக அவரிடம் சொல்லிச் செல்கிறான்.

ஆனால், தேர்வுப் பட்டியலில் சங்கர் பெயர் முதலிடத்திலும் சுகுமார், சேகர் பெயர்கள் இரண்டாம் இடத்திலும் இருக்கின்றன. அதனால் சங்கர் மருத்துவ அதிகாரியைச் சந்தித்து, தனக்குப் பதிலாக சுகுமாருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பை வழங்குமாறு சொல்கிறான். தலைமை அதிகாரி அதனை எழுதித் தருமாறு கேட்கிறார். ‘சரி’ என்று சொல்லிச் செல்கிறான்.

ஆனால், மறுநாள் சுகுமார் தனது காரை சங்கரிடம் கொடுத்து, ‘சர்வீஸுக்கு விடு’ என்று கூறி தேர்வு எழுத, பெங்களூர் செல்வதாகச் சொல்லிச் செல்கிறான். அந்தக் காரை ஓட்டிச் செல்லும்போது, சங்கர் விபத்தில் மரணம் அடைகிறான். சுகுமாரைப் பழிவாங்க நேரம் பார்த்துக்கொண்டிருந்த சேகர், காரின் பிரேக்கை சுகுமார்தான் துண்டித்து வைத்து சங்கரைக் கொலை செய்துவிட்டான் என்று சங்கரின் அப்பா திருஞானத்தையும் சங்கரின் மனைவி உமாவையும் நம்பவைத்து, அவர்கள் மூலமாக நீதிமன்றத்தில் சுகுமார் மீது வழக்கு தொடுக்கிறான்.



தனது கணவன் சங்கரைக் கொலை செய்தது தன் அண்ணன் சுகுமார் என்று நம்பும் உமா, சுகுமாருக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க நீதிமன்றத்தில் வாதாடுகிறாள். தன் கணவன் சுகுமாரைக் காப்பாற்ற ஆனந்தியும் வாதிடுகிறாள். விசாரணை நடக்கிறது.

விசாரணையின் இறுதியில், ‘தன்ராஜ் என்பவன்தான் தனது லாரியால் மோதி, சங்கரைக் கொலை செய்தான் என்பதையும், அதை அறிந்து கொதித்தெழுந்த நான், எனது காரினால் தன்ராஜை மோதிக் கொலை செய்து மயானத்தில் புதைத்துவிட்டேன்’ என்றும் சுகுமார் நீதிபதியிடம் கூறுகிறான்.

தன் கணவனைக் கொன்ற தன்ராஜை தன் அண்ணன் தனக்காகத் தன் மேலுள்ள பாசத்தால் கொலையும் செய்திருக்கிறான் என்பதை உணர்ந்து, உமா தன் அண்ணனுடன் சேர்வதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே ‘பாசப்பறவைகள்’ திரைப்படத்தின் கதை.

இத்திரைப்படத்தின் தொடக்கத்திலேயே திரையில் தோன்றி, ‘பாசப்பறவைகள்’ படத்தின் கதை பற்றி கலைஞர் எடுத்துச் சொல்கிறார். அவரது இவ்வுரையே படத்தின் கதையை மிகத் தெளிவாக விளக்குவதாக அமைந்திருக்கும்.

### அன்பு உடன்பிறப்புகளே!

“வணக்கம். என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே, வணக்கம்.

பெரியார், அண்ணா வழியில் வந்த நான் அரசியல் துறையில், கலை இலக்கியத் துறையில் தொடர்ந்து பணியாற்றி, இதுவரையில் எழுதி உள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை சுமார் 50-ஐ எட்டக்கூடும். முழுமையாக அரசியல் கலந்த படங்கள். சமுதாயக் கொள்கைகளை மையமாகக் கொண்ட படங்கள், முற்றிலும் குடும்பச் சித்திரமாக எழுதிய படங்கள், இப்படி பல எழுதியுள்ளேன்.

இதோ, நீங்கள் காணப்போகும் ‘பாசப் பறவைகள்’ ஓர் ஒழுக்கமிகு குடும்பச் சித்திரம். தேன் மணக்கும் தென்றல் வீசுகின்ற ஒரு குடும்பத்தில், திடீரெனத் தோன்றுகிறது புயல். தெளிந்த நீரோடையாக இருந்த அண்ணன் தங்கையின் பாசமிகு உறவில் ஒரு கல் வீசப்படுகிறது. சுய லாபத்திற்காக சமூக விரோதச் செயலில் ஈடுபடுகிற ஒருவனைக் கண்டிப்பதே குற்றம் எனக் கருதுகிறான், அந்தக் குற்றத்தைச் செய்யும் கொடியவன். பாசமுள்ளோரைப் பிரித்து வைத்து விளையாடும் நாச எண்ணம் தலை தூக்குகிறது.

ஊர் மெச்ச வாழ்ந்த குடும்பத்தில் உறவு அறுபடுகிறது. பகை வளர்கிறது. பழிவாங்கும் போக்கு தொடர்கிறது. அண்ணன் என்ற பாசமிகு சொல்லுக்கே பாவிகள் களங்கம் கற்பித்து, பாதகம் புரிகிறார்கள்.

அண்ணன் - அன்பு யாழில் எழும் இன்ப நாதம்.

அண்ணன் - பாச மலரில் கமழ்ந்திடும் இனிய மணம்.

அண்ணன் - எதையும் தாங்கும் இதயத்தின் அளவான துடிப்பு...” என்று பேசுகிறார்.

ஆனால், ‘அண்ணன்’ குறித்த கலைஞரின் உவமைகளைக் கேட்கும்போது, அறிஞர் அண்ணாவை மனதில் கொண்டுதான் இவ்வாறு பேசுகிறாரோ என்று தோன்றும். இந்தப் படத்திலும் நீதிமன்ற வாதங்கள் அனல் தெறிக்கும்படி எழுதியிருப்பார் கலைஞர்.

> தேன் மணக்கும் தென்றல் வீசுகின்ற ஒரு குடும்பத்தில், திடீரென தோன்றுகிறது புயல். தெளிந்த நீரோடையாக இருந்த அண்ணன் தங்கையின் பாசமிகு உறவில் ஒரு கல் வீசப்படுகிறது.

...காட்சி விரியும்

## காலம் மாறலாம், கொள்கை மாறாது - ‘முரசொலி’!



இன்றைய டிஜிட்டல் யுகம், இன்ஸ்டாகிராம் மற்றும் சோசியல் மீடியாக்கள் மூலமே அரசியலைத் தீர்மானிக்க முடியும் என்றொரு மாய பிம்பத்தை உருவாக்கிவருகிறது, ஒரு கூட்டம். ஆனால், ஓர் இயக்கத்தின் உயிர்நாடி என்பது அந்த மாய பிம்பங்களில் இல்லை; மாறாக, தொண்டர்களின் ரத்தத்தில் கலந்திருக்கும் கொள்கை ஆழத்தில்தான் இருக்கிறது. அன்று முதல் இன்று வரை, கழகத் தொண்டர்களுக்கு ‘முரசொலி’, ஓர் இதழ் அல்ல, அது ஓர் உயிர் மூச்சு, என முகநூலில் தனது உணர்வுகளைப் பகிர்ந்துள்ளார் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய்.

கழக முன்னோடி எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் உடன்பிறந்த சகோதரரான அவரது தந்தையார் எஸ்.எஸ்.அருணாசலம் அவர்கள், 90 வயதிலும் ‘முரசொலி’ வாசிக்கும் படத்தைப் பகிர்ந்து கருத்துப் பகிர்ந்துள்ளார்.

“எனது 90 வயது தந்தையார், ‘முரசொலி’ படிக்காமல் ஒரு நாளைக்கூட தன் வாழ்நாளில் கழித்ததில்லை. நாம் பெறும் அரசியல் நுண்ணறிவும், பழைமைவாத அரசியலை உடைத்தெறியும் புதிய சிந்தனைகளும், எந்த ஒரு அதிவேக சமூக ஊடகத்திலும் கிடைக்காதவை. தகவல்களைத் தருவதோடு மட்டுமல்லாமல், ஒரு தொண்டனுக்கு எது சரி, எது தவறு என்ற தெளிவை ஊட்டுவதில் ‘முரசொலி’ இன்றும் முதலிடத்தில் உள்ளது. குறிப்பாக, என்னைப் போன்ற இளைஞர்களை மிகவும் கவரும் பாசறைப் பக்கம் அட்டகாசம்!

எத்தனை ஊடகங்கள் வந்தாலும் சரி, எத்தனை மாய பிம்பங்கள் உருவானாலும் சரி... உண்மையான கழகத் தொண்டர்கள் இருக்கும் வரை, ஓங்கி அடிப்பது முரசின் ஒலிதான்” என்று தனது உணர்வுகளைப் பதிவுசெய்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





தி.கூடலரசன்

### தலைவரைச் சந்திப்பதே மகிழ்ச்சி!

2012-ஆம் ஆண்டில் ஒரு நாள், சென்னை, கோபாலபுரம் இல்லத்துக்கு காலை நேரத்தில் சென்றிருந்தேன். தலைவர் கலைஞர் அவர்களைக் காண சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற எண்ணத்துடன் காத்திருந்தேன். அண்ணன் சண்முகநாதன் அவர்களிடம் விருப்பத்தைத் தெரிவித்தேன். “காலையிலா?” என்றவர், “சொல்கிறேன்” என்று கூறிச் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பி வந்து, “மாடிக்குச் செல்லுங்கள்” என்றார். பலமுறை சென்ற இடம் எனினும், மெதுவாகப் போய் வணக்கம் வைத்தபோதே நிமிர்ந்து பார்த்த தலைவர், வழக்கமான வினாக்கள் கேட்டபடி படித்துக்கொண்டிருந்தார். பதில் அளித்தபடி, புகைப்படம் எடுத்துக்கொண்டு விடைபெற்றேன். முத்தமிழறிஞரைப் பார்க்க எந்தக் காரணமும் தேவையில்லை. அவரைப் பார்ப்பதே மகிழ்ச்சிதான்.

- தி.கூடலரசன்,
பத்திரிகையாளர், மதுரை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கழகத்தின் பெயர்...

“ஒரு கழகமோ - கட்சியோ, வளருகிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள, சாதாரணமான தனிப்பட்டவர்கள் கூடிப் பேசுகிற இடத்திலே, கடைவீதியிலே, சாலை வழியிலே எங்கெல்லாம் அந்தக் கழகமோ, அக்கட்சியின் பெயரோ அடிபட்டால், அதுவே போதுமான அத்தாட்சியாகும். அதை வைத்துப் பார்ப்போமானால், தி.மு.கழகத்தின் பெயர் அடிபடாத இடமே கிடையாது. அதன் நடவடிக்கைகளைப் பேசாத கட்சிகளே கிடையாது. கழகப் பெயரை உச்சரிக்காத கட்சித் தலைவர்களே கிடையாது!”

- பேரறிஞர் அண்ணா - நம்நாடு 23.08.1954

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900